அனுப்புநர்

இணை இயக்குநர் (மேல்நிலை),
அரசுத் தேர்வுகள் இயக்ககம்,
சென்னை – 600 006.

பெறுநர்

1. அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
2. இணை இயக்குநர் (கல்வி) புதுச்சேரி

ந.க.எண்.016196 /எச் 1 /2022 நாள் : 08.11.2022

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6– மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வு, மார்ச்/ஏப்ரல் 2022 – மேல்நிலை முதலாமாண்டு CBSE பாடத்திட்டம் / வேறு மாநில பாடத்திட்டம் – மேல்நிலை இரண்டாமாண்டு தமிழகப் பாடத்திட்டத்தில் தேர்வெழுதுதல் –உரிய ஆவணங்களை அனுப்பக் கோருதல் – சார்பு.

பார்வை : அரசாணை (நிலை) எண்.217, பள்ளிக் கல்வி (அ.தே) துறை, நாள்.06.12.2019.

*****

பார்வையில் கண்டுள்ள அரசாணையில், மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வு எழுதாமல் CBSE /பிற மாநில பாடத்திட்டம் சார்ந்த பள்ளிகளில் +1 பயின்று தேர்ச்சி பெற்ற மாணவர்களை தமிழ்நாடு மாநில பாடத்திட்டத்தில் மேல்நிலை இரண்டாமாண்டு கல்வியை தொடர பள்ளிகளில் அனுமதிப்பதற்கு முன் பள்ளிக் கல்வி இயக்கத்தின் முன் அனுமதியினை கண்டிப்பாக பெறுதல் வேண்டும் எனவும், அம்மாணவர்கள் மேல்நிலை முதலாமாண்டு பயின்ற பாடத் தொகுப்பிற்கு இணையான பாடத்தொகுப்பில் மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வினை எழுத அனுமதிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

எனவே, CBSE / பிற மாநில பாடத்திட்டத்தில் +1 பயின்று தேர்ச்சி பெற்று, தற்போது தமிழ்நாடு மாநில பாடத்திட்டத்தின்கீழ் பள்ளியில் +2 பயிலும் மாணவர்களின் பெயரை மார்ச்/ஏப்ரல் 2023 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்விற்கான பள்ளி மாணவர்களின் பெயர்பட்டியலில் சேர்ப்பதற்கு தேவைப்படும் கீழ்க்காணும் ஆவணங்களை 30.11.2022–க்குள் அரசுத் தேர்வுகள் இயக்ககத்திற்கு அனுப்பி வைத்தால் மட்டுமே, அம்மாணவர்களது பெயரை +2 பொதுத் தேர்விற்கான பெயர்ப்பட்டியலில் சேர்க்க இயலும் என தெரிவிக்கப்படுகிறது.

1. மேல்நிலை இரண்டாம் ஆண்டு கல்வியை தொடர அனுமதித்து பள்ளிக் கல்வி ஆணையரின் அனுமதிக் கடிதம்.

2. மாணவர் மேல்நிலை முதலாம் ஆண்டு பயின்ற பாடத் தொகுப்பிற்கு இணையான பாடத் தொகுப்பில்தான் தற்போது மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயில்கிறார் என்பதற்கான சம்பந்தப்பட்ட மாவட்டக் கல்வி அலுவலரின் சான்றிதழ்.

3. மாணவர் விவரம் அடங்கிய உறுதிமொழி படிவம். (படிவம் இணைக்கப்பட்டுள்ளது).

**இணைப்பு:** உறுதிமொழி படிவம்.

**நகல் :**

அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
(தகவலுக்காக)

**ஒம்/—**
**இணை இயக்குநர்(மேல்நிலை)**